பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 24 வியாழக்கிழமை (08.03.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 103

# புலிகள் மீதும், அரசு மீதும் அமெரிக்கா

# கடும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு

## இராஜாங்கத் திணைக்களத்தின் வருடாந்த அறிக்கையில் தெரிவிப்பு

நியூயோர்க், மார்ச் 08

**அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், உலகளாவிய ரீதியில் மனிதவுரிமைகள் நிலைவரத்தை மதிப்பிட்டு - ஆய்வு செய்து - வெளியிடும் ஆண்டறிக்கையில் மனித உரிமை மீறல்களுக்காக இலங்கை அரசையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் கடுமையாகச் சாடி விமர்சித்திருக்கின்றது.**

**2006 ஆம் ஆண்டுக்கான இந்த அறிக்கை, இலங்கையில் தனது பிரஜைகளின் மனித உரிமைகளை மதிப்பது தொடர்பான அரசின் போக்கு சரிவடைந்தமைக்கு போர் நிறுத்த ஒப்பந்தம் செயலிழந்து போனமையும் ஒரு காரணம் என்று தெரிவித்திருக்கிறது.**

ஆட்கடத்தல்கள், சித்திரவதைகள், தன்னிச்சையான கைதுகள், தடுத்து வைத்தல்கள், காணாமற்போதல், சிறுவர்களைப் படைக்குச் சேர்த்தல், துணைப்படைகள், நீதிக்குப் புறம்பான விடயங்கள் என்று பல்வேறு தலைப்புகளில் இலங்கை நிலைவரத்தை மதிப்பிட்டு ஆய்வுசெய்து தனது அறிக்கையை வெளியிட்டிருக்கிறது அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம்.

மேற்படி அறிக்கையில் இலங்கை விவகாரம் குறித்துத் தெரிவிக்கப்பட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு-

தனது பிரஜைகளின் மனித உரிமைகளை மதிப்பது தொடர்பான அரசின் போக்கு சரிவடைந்தமைக்கு யுத்த நிறுத்த ஒப்பந்தம் செயலிழந்து போனமையும் ஒரு காரணம்.

அரச முகவர்களினால் சட்ட விரோதப் படுகொலைகள், இனந்தெரியாத ஆட்களினால் உயர்மட்டப் பிரமுகர்கள் கொல்லப்படுதல், அரசுடனும் புலிகளுடனும் இணைந்து செயலாற்றும் துணைப் படைகளினால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் படுகொலைகள் மற்றும் காணாமற்போதல் உட்பட பல்வேறு மனித உரிமைப் பிரச்சினைகள் குறித்து நம்பத்தகுந்த வட்டாரங்கள் அறிக்கையிட்டுள்ளன.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச்சட்டம் 105 வாக்குகளால் நேற்று நிறைவேறியது

கொழும்பு, மார்ச் 8

அவசரகாலச் சட்டம் மேலும் ஒருமாதத்திற்கு நாடாளுமன்றில் 105 மேலதிக வாக்குகளால் நீடிக்கப்பட்டது.

அவசரகாலச்சட்டத்தைநீடிப்பது தொடர்பாக நேற்று நாடாளுமன்றத்தில் நடந்த வாக்கெடுப்பில் ஆதரவாக 123 வாக்குகளும் எதிராக 18 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 17 பேரும் மேலக மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசனும் எதிர்த்து வாக்களித்தனர். (அ-1)

## தஞ்சம் கோரியோரைத் திருப்பியனுப்ப வேண்டாம் ஆஸி. அரசிடம் தமிழ்க் கூட்டமைப்பு கோரிக்கை

கொழும்பு, மார்ச் 8

அடைக்கலம் கேட்டு வந்துள்ள 83 இலங்கைத் தமிழர்களையும் அவர்களது சொந்த நாட்டில் நிரந்தர சமாதானம் உருவாகும்வரை திருப்பி அனுப்பவேண்டாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆஸ்திரேலியா மற்றும் இந்தோனேஷிய அரசாங்கங்களிடம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றது.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுக் கூட்டாக ஊடக அறிக்கை ஒன்றை விடுத்தனர். அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த 22.02.2007 - 22.02.2007 வரையான ஐந்து ஆண்டு யுத்தநிறுத்த ஒப்பந்த காலத்தில் இலங்கை அரச படைகளாலும் அதன் துணை இராணுவக் குழுவினராலும் 1,627 பேர் கொலை செய்யப்பட்டுள்ளதுடன், 697பேர் கடத்தப்பட்டுமுள்ளனர். நூற்றுக்கணக்கானவர்கள் மேற்படி சட்டங்களின் கீழ் கைதுசெய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளதுடன் இவ்வாண்டு பெப்ரவரி மாதத்தில் மட்டும் 60பேர் கொலை செய்யப்பட்டும் 62பேர் கடத்தப்பட்டுமுள்ளனர்.

இலங்கையில் நடைமுறையிலிருக்கும் பயங்கரவாத தடைச்சட்டம் பரந்தளவிலான மனிதவுரிமை மீறல் சம்பவங்களிற்கு வழிவகுத்திருப்பதாக சர்வதேச யூரிகள் அமைப்பு தெரிவித்துள்ள அதே வேளை, இலங்கை அரசு பயங்கரவாத சட்டத்தினைப் பயன்படுத்தி மனிதவுரிமை

(04 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளைத் தோற்கடிப்பதற்கான அரசின் செயற்பாடுகள் தொடரும்

### நாடாளுமன்றத்தில் பிரதமர் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 08

இந்த நாட்டினதும் நாட்டு மக்களினதும் பாதுகாப்புக்கருதி புலிகள் மேற்கொண்டு வரும் பயங்கரவாத நடவடிக்கைகளைத் தோற்கடிப்பதற்கும் தமிழ் மக்களை அவர்களிடமிருந்து மீட்டெடுப்பதற்குமான அரசின் செயற்பாடு தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படும்

- இவ்வாறு பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்று நாடாளுமன்றில் அறிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் பிரேரணையை சபையில் சமர்ப்பித்து அது மீதான விவாதத்தை ஆரம்பித்து உரையாற்றுகையிலேயே பிரதமர் இப்படித் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

புலிகள் மேற்கொண்டுவரும் பயங்கரவாத நடவடிக்கைகளை முறியடிப்பதில் எமது படையினர் வெற்றிகண்டுள்ளனர். புலிகளுடன் சேர்ந்து சில சிங்களப் புலிகளும் கொழும்பில் பல இடங்களில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்தமை அரசுக்குத் தெரியவந்தது. அந்தத்திட்டத்தைஅரசுவெற்றிகரமாக முறியடித்துள்ளது. கொழும்பில் பல இடங்களிலும் முக்கிய அரசியல்வாதிகளையும் தாக்குவதற்கு முயற்சியெடுத்த புலிகளை அரசு கைதுசெய் துள்ளது.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா மாமடுவில் கிளைமோர்

கொழும்பு, மார்ச் 8

பொலிஸார் பயணித்த வாகனத்தை இலக்குவைத்து வவுனியாவில் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலில் சிக்கி பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பலியானார். சிவிலியன் உட்பட இருவர் சிறு காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை 10.50 மணியளவில் வவுனியா - மாமடு சந்திக்கு அண்மையில் இந்தக் கிளைமோர் வெடித்ததாக தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையம் அறிவித்திருக்கின்றது.

வவுனியாவிலிருந்து ஹொரவப் பொத்

(04 ஆம் பக்கம் பார்க்க)

## நளினியின் மகள் இந்தியா செல்வதற்கு சென்னை உச்சநீதிமன்றம் அனுமதி

சென்னை, மார்ச் 8

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைவழக்கில் சிறைவைக்கப்பட்டிருக்கும் நளினி - முருகன் தம்பதியினரின் மகள் தனது கல்வி வாய்ப்புக்காக இந்தியாவுக்கு வருவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்று சென்னை உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

அவர் இந்தியா வந்த பின்னர் இந்தியக் குடியுரிமை பெற விண்ணப்பிக்க முடியும்.

அந்த விண்ணப்பத்தைப் பரிசீலித்து அவருக்குக் குடியுரிமை வழங்கலாமா என்பது பற்றி நான்கு வார காலப்பகுதிக்குள்முடிவை அறிவிக்கவேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

நளினி - முருகன் தம்பதியினரின் மகள் ஆருத்ரா. இப்போது இலங்கையில் தனது பாட்டியுடன் வசித்துவருகிறார். ஆருத்ராவை இந்தியா கொண்டுவந்து இங்கேயே படிக்க வைக்க அனுமதி கோரப்பட்டது. ஆனால், இதற்கு மத்திய அரசு அனுமதி மறுத்தது.

இதைத் தொடர்ந்து நளினி மீண்டும் சென்னை உச்சநீதிமன்றத்தில் ஒரு மனுத் தாக்கல் செய்தார். எனது மகளை இந்தியா வர அனுமதிக்க வேண்டும். அம்மாவுடன்

(04 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழர் விபரம் திருச்சியில் திரட் ப்படுகின்றது

திருச்சி, மார்ச் 8

தமிழ்நாடு திருச்சி மாவட்டத்தில் தங்கியுள்ள ஈழத்தமிழர்களின் விவரங்களைத் திரட்டும் பணியில் தமிழகக் காவல்துறையினர் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

திருச்சியில் உள்ள கொட்டப்பட்டு முகாமில் தங்கியுள்ள ஈழத்தமிழர்களின் முழுவிவரங்களையும் தமிழக காவல் துறையினர் ஏற்கனவே சேகரித்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து திருச்சியில் வாடகை வீடுகள் மற்றும் சொந்த வீடுகளில் தங்கியுள்ளவர்களின் விவரங்கள் தற்போது சேகரிக்கப்பட்டு வருகின்றன. (அ-4)

## நூறுக்கும் மேற்பட்ட தமிழர்கள் 2 மாதங்களில் காணாமற்போயினர்

கொழும்பு, மார்ச் 8

இந்த வருடத்தின் முதல் இரண்டு மாதங்களில் - ஜனவரி, பெப்ரவரியில் - நாட்டில் நூறுக்கும் மேற்பட்டோர் கடத்தப்பட்டும் காணாமற்போயுமுள்ளனர்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் பிந்திய புள்ளிவிவரங்களில் இருந்து இது தெரியவந்துள்ளது.

இவர்களில் மிகப்பெரும்பாலானோர் கொழும்பு, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களைச் சேர்ந்த தமிழர்களே என்றும் அந்தப் புள்ளி விவரங்கள் சுட்டிக் காட்டுகின்றன. ஏனைய இனங்களைச் சேர்ந்த ஒருசிலரும் இதில் அடங்குவர்.

2006ஆம் ஆண்டில் கடத்தப்பட்டோர், காணாமற்போனோரின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டியிருந்தது. கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரும் காணாமற்போனவர்களில் ஒருவர். (அ)

## முத்துராஜவெலவில் மீட்கப்பட்ட சடலங்கள் மட்டக்களப்பு தமிழ் இளைஞர்களுடையன

கொழும்பு, மார்ச் 8

கந்தானை, முத்துராஜவெல சதுப்புநிலப் பகுதியில் கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் மீட்கப்பட்ட ஐந்து சடலங்களும் மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழ் இளைஞர்களுடையன என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

மட்டக்களப்பிலிருந்து வந்த அவர்களது உறவினர்கள் சடலங்களை அடையாளம் காட்டியதாக பொலிஸ் வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

சடலங்களின் பிரேத பரிசோதனைகள் நேற்று ராகம ஆஸ்பத்திரியில் நடத்தப்பட்டன.

மட்டகளப்பின்-சேர்ச் வீதியைச் சேர்ந்த அருள் சுரேஸ், ஆயித்தியமலையைச் சேர்ந்த சுப்பிரமணியம் பிரபாகரன், கொக்கட்டிச் சோலையைச் சேர்ந்த சிவப்பிரகாசம் மதிரூபன், நகரத்தைச் சேர்ந்த கந்தசாமி வெள்ளையன், உன்னிச்சைமலையைச் சேர்ந்த பொன்னையா கமல் கார்த்திகேயன் ஆகியோரே அடையாளம் காணப்பட்டவர்களாவர். (அ)

## போர்க் கைதிகளுடன் உறவினர் நேற்றுக் கிளிநொச்சியில் சந்திப்பு

கிளிநொச்சி, மார்ச் 8

தமிழீழ விடுதலைப் புலிகளால் போர்க் கைதிகளாகக் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள அரச படைகளைச் சேர்ந்த ஐவரையும் அவர்களது உறவினர்கள் நேற்றுச் சந்தித்து உரையாடினர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரால் அவர்கள் கிளிநொச்சிக்கு அழைத்துவரப்பட்டனர். தமது சகோதரர்கள், பிள்ளைகளை அவர்கள் நேரில் கண்டு பேசினர்.

நேற்று முற்பகல் 11 மணிதொடக்கம் பிற்பகல் 2.30 மணிவரை படையினருடன் உறவினர்கள் கலந்து பேசினர். இராணுவத்தைச் சேர்ந்த சமந்த வீரசிங்க (வயது 18) மற்றும் கடற்படையைச் சேர்ந்த இந்திக்கா பிரியகுமற (வயது30), சமிந்த குமாரஹெவகே (வயது28), கமல் ஹெமந்த குமாரசிறீ (வயது 26), அனில் பிரியங்க மடதெனிய (வயது 26) ஆகிய ஐவருமே விடுதலைப் புலிகளால் போர்க் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளவர்களாவர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பாராட்டி வாழ்த்துகிறோம்



இன்று 08.03.2007
வியாழக்கிழமை பேராதனைப்
பல்கலைக்கழகத்தில்
"வணிகமாணி" பட்டம் பெறும்

**திருமதி றமணப்பிரியா குகப்பிரசாதஆராத்தியர்**

அவர்களை மேலும்பல
பட்டங்கள் பெற்று வாழ
வாழ்த்துகிறோம்.

திரு. திருமதி பிரகதீஸ்வர சர்மா
திரு. திருமதி சாயிஜீவானந்தக்குருக்கள் (ஆஸ்திரேலியா),
திரு. திருமதி சிவகுமாரக்குருக்கள்.

கல்வியங்காடு. (58642)

## ENGLISH & SINHALA CLASSES

கிரமமான முறையிலமைந்த பாடங்கள் - பயிற்சிகள்/மொழிபெயர்ப்புப் பயிற்சிகள் மூலம் இரு மொழிகளிலும் சரளமாக வாசிக்க, பேச, எழுத அடிப் படையில் இருந்து கற்பிக்கப்படும். தரம் 6 இற்கு மேற்பட்ட மாணவர்கள், பாடசாலை விலகியவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அரச/தனியார் துறை ஊழியர்கள் உட்பட ஆர்வமுள்ள எவ்வயதினரும் சேரலாம். ஒவ்வொருவருக்கும் தனிக்கவனம் மூலமே கற்பிக்கப்படும். வகுப்புகள் (தினசரி மு.ப.9.00 முதல் 11.00 வரை பி.ப.3.00 முதல் 5.00 வரை மாத்திரமே).

T.SAGATHEVAN, *B.A London, Tutor/Translator (PVT).*
46, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். *T.P.No. 2223520*

## கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)

பதிவு இலக்கம்: ஜே/1572 பதிவு திகதி: 01.03.1972

**கல்வித் தகைமைகள் திருத்தம்**

22.02.2007ஆம் திகதிய உதயன் நாளேட்டில் பிரசுரமாகியிருந்த கணக்காளர் பதவி குறியீட்டு இல 104/10 பதவிக்கான விளம்பரத்திற்கமைய கோரப்பட்ட கல்வித்தகைமையில் பின்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

**கல்வித் தகைமைகள்**

அ)கூட்டுறவுச் சங்கப் பணியாளர் 11 ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது கணக்காய்வு லிகிதர் பதவியில் 3 வருடத்திற்கு குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 12ஆவது சம்பளத்திட்டத்திலான மேற்குறித்த பதவிகளில் 6 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ)ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப்பதிவாளர் நிறுவனத்தின் இறுதிப் பரீட்சையிலான சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்குத்துறையிலான பதவியில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையிலான சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்குத் துறையிலான பதவியில் நான்கு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

இ)கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் உயர்பிரிவில் சித்தி/ க.பொ.த. (உ/த) கணக்கியல் உள்ளடங்கியதாக மூன்று பாடங்களில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்கியல் தொடர்பான துறையில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**விண்ணப்ப முடிவு திகதி:** 19.03.2007 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**தலைவர்,**
**கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கம்,**
**கோண்டாவில்.**

(சி-52155)

## 31ஆம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்

*தோற்றம்* 09 . 04 . 1933



*மறைவு* 06 . 02 . 2007

**அமரர் கோபாலன் தனசேகரம்**

(ஓய்வுபெற்ற நீதிமன்ற கட்டளை சேவகரும் எழுத்தாணை நிறைவேற்றுநரும்)

*காலத்தால் காவியமானவரே*
*காலமெல்லாம் யாம் சிறப்புடனே*
*வாழ வழிதந்த எங்கள் குல விளக்கே*
*இன்று தாங்களில்லா வாழ்வதனால்*
*மனமுடைந்து தினம் தினம்*
*தங்கள் நினைவலைகளுடன்...*
*ஈர விழிகளுடன் ஏங்கி நிற்கிறோம்!*
*என்றும் தங்களாத்மா சாந்தி பெறும்.*
*ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*

இன்று (08.03.2007) வியாழக்கிழமை எமது இல்லத்தில் காலை 6 மணியளவில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைத்து அன்புள்ளங்களையும் வேண்டிக்கொள்வதோடு, இவ்வழைப்பினை ஒவ்வொரு தனி நபருக்குமான அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

செல்வவிலாஸ், கம்பர்மலை, வல்வெட்டித்துறை. - குடும்பத்தினர்.

## WANTED

For immediate Night Locum Duty.
M.O/ R.M.O
Contact:
**Medical Director**
Central Nursing Home (Pvt) Ltd.
350, Palaly Road,
Thirunelvely.

## 4Wheel drive Jeep for sale/Long Lease

**Brana New Model 7 Seater Jeep with Full options & 4 wheel drive for sale/ Long Lease.**
**Ideal for NGO's or Departments**
**Contact: Mr. Ram - 021 222 9727**
**or 077 5943306**

## வீடு வாடகைக்கு

சுண்டுக்குளியில் பிரபல பாடசாலைகளுக்கு அருகில் உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத்தொடர்பு வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

வெளிநாட்டு நிறுவனம் மற்றும் தனியார் நிறுவனங்களும் அலுவலகம் நடத்தக் கூடியவர்களும் விரும்பத்தக்கது.

இ.சிவலிங்கம்.
(58649) T.P 0777357675, 0214591583

## சான்றிதழ் வழங்கல்

எமது நிறுவனத்தில் கணினிக் கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்த O/L 2006 பிரிவு மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு 11.03.2007 (2மணிக்கு) இடம் பெறும். அத்துடன் ஏனைய பிரிவுகளில் கணினிக் கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களும் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு நேரில்!

**CB Computer Academy**
Station Road, Kondavil. ☎:-021-4590291

புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!

**COMPUTER EXPRESS**
ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office
No 15,
Siambiyadi Lane,
(off Stanly Rd.)
021-222 5250,
0777 222422

Branch office
No 167,
Kasthuriyar Rd,
(Near Uthayan Publication)
Jaffna

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc.
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macro media Flash MX
Course Fee :2000/=

**ஒரே நாளில் ஆரம்பம்:- 12/03/2007 - 09.00**

ஏனைய அனைத்துக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றது.

Batch I : 09/03/2007
Batch II : 10/03/2007
Batch III : 11/03/2007
Batch VI : 14/03/2007

## வாடகைக்கு

நிறுவனங்களுக்கு பொருத்தமான சகல வசதிகளையும் கொண்ட Single Story Complex Building வாடகைக்கு உண்டு.

தொடர்பு: Dr.T.KULASINGAM
7/1, நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் சக ஆசிரியை
திருமதி
ரவிச்சந்திரிகா கிருஷ்ணானந்தசர்மா
அவர்களின் அன்பு மாமன்
வைத்திய கலாநிதி பிரம்மஸ்ரீ
**பொன்னையா ஐயா ஸ்ரீபதிசர்மா**

அவர்களின் மறைவையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**ஆசிரியர் கழகம்,**
(சி-52162) வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

## மரண அறிவித்தல்

***மயில்வாகனம் மனோன்மணி***

அரச வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் மனோன்மணி காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனத்தின் அன்பு மனைவியும் லலிதாபூசணி, சந்திரமலர், செல்வநாயகம்,இராசநாயகம் (மின்சார சபை - யாழ்ப்பாணம்), அருள்நாயகம்(சுவிஸ்), சுசீலா, சறோசா (சுவிஸ்), அமரநாயகம் ஆகியோரின் அன்புத் தாயும் கனகசபாபதி, தவலோகநாதன், மங்களம், ஆனந்தி, சாந்தி (சுவிஸ்), யோகரத்தினம் (நல்லூர் M.P.C.S.), சற்குணம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (08.03.2007) வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 10மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

.../4, அரசவீதி, நல்லூர். தகவல்: ம. இராசநாயகம் (மகன்).

## கண்ணீர் அஞ்சலி



தென்மராட்சி பிரதேச செயலக தொழில் பயிற்சி நிலையத்தில் போதனாசிரியராக கடமையாற்றும் **த.பகீரதன்** அவர்களின் பாசமிகு தாய்

**திருமதி தவராசா பூபதி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

**தொழிற் பயிற்சி நிலையம்,**
**சாவகச்சேரி.**
(சி-52158)

## சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம்

### பதவி வெற்றிடங்கள்

பின்வரும் வெற்றிடங்களுக்கு ஆர்வமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றோம்.

**01. நிர்வாக உத்தியோகத்தர் (Administrator)**

பிரதான செயற்பாடுகள்:
- நிலையத்தை நிர்வாகமயமாக ஆவண நடைமுறைப் பாடுகளின் மூலம் அபிவிருத்திகளை வழிநடத்தல்.
- நிலையத் தொடர்புகளையும் வேலைகளையும் சீரமைத்தல்.
- கணக்குகளை ஒருங்கமைத்தல் / ஆவணப்படுத்தல்.

தகைமைகள்:
- முகாமைத்துவ அறிவு
- கணக்கியல் அறிவு
- ஆங்கில அறிவு
- வயது எல்லை - 40-50

**02. சமாதான கல்வி உத்தியோகத்தர் *(Peace Education Officer)***

பிரதான செயற்பாடுகள்:
- சமாதானக்கல்வி தொடர்பான பயிற்சிகளை ஒருங்கமைத்து ஆசிரியர் மாணவர்களுக்கு பயிற்சி அளித்தல்.
- நாடகங்களை நெறிப்படுத்தி தகவல்களை பரிமாறுதல்

தகைமைகள்:
- நேர்முகங்களை முன்னின்று வழிநடத்தும் ஆற்றல்.
- வன்முறையற்ற தொடர்பாடல் பற்றிய அனுபவம்
- வேலைசார் தொடர்பான கல்விச் சான்றிதழ்.
- தலைமைத்துவம்

**03. தொடர்பாடல் உத்தியோகத்தர் (Communication Officer)**

பிரதான செயற்பாடுகள்:
- செயற்பாட்டுத் திட்டங்களை நெறிப்படுத்தல்
- சமாதான நூலகம்(Peace Library) அமைத்தல்
- பொதுத் தொடர்புகள் (Public Relation)
- இணையத்தளம் (Website) நிர்வகித்தல்
- தகவல் பிரசுரம் (Newsletter)
- பொதுத் தொடர்புகளில் மக்களைப் பயிற்றுவித்தல்

தகைமைகள்:
- கணனி அறிவு (VB, Flash, C++)
- ஆங்கில அறிவு
- Web Designing

மூன்று பதவிகளுக்குமான பொதுத்தகைமைகள்:
- *ஆங்கிலத்தில் உரையாட, எழுதத் தெரிந்திருக்க வேண்டும்*
- *கணனி அறிவு (MS-Office & DTP)*
- *க.பொ.த. உ/த பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.*
- *வன்முறையற்ற சமாதானப் பணியில் அர்ப்பணிப்பு*
- *வேலை தொடர்பான துறைசார் அனுபவம்.*

விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய இறுதித் திகதி 17.03.2007

**இயக்குநர்**
சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம்,
இல. 08, குருசோ வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
Tel. / Fax.: 021 222 8131.

"வன்முறையற்ற வழிகளில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் நோக்கி"

## AFRAS ENTERPRISES

இங்கே தரப்பட்டுள்ள பெயர்கள் உடைய பாஸ்போட்கள் எங்களிடம் உள்ளது. அவைகளை நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும். அல்லது எங்களது e-mail முகவரி மூலம் தொடர்பு கொள்ளவும். afras@sltnet.lk அல்லது தங்களின் முகவரியை அறியத் தரவும். நாங்கள் உங்களுக்கு அனுப்பிவைப்போம்.

| | |
|---|---|
| 01. செல்லையா பிள்ளை | M 0853913 |
| 02. தங்கராசா பிரபாகரன் | N 1846492 |
| 03. சிவஞானம் சதேஸ்வரன் | M 1148056 |
| 04. குமாரசாமி குகநாதன் | M 1236840 |
| 05. சின்னசாமி அகஸ்ரின் குணபாலன் | M 1410904 |
| 06. மகேந்திரராஜா மயூரன் | N 1612704 |
| 07. முத்தையா தெய்வேந்திரம்பிள்ளை | M 1322762 |
| 08. ரமேஷ் கந்தசாமி | N 1516231 |
| 09. ராசதுரை கொலின்ஸ் குமார் | N 0075533 |
| 10. சிவராசா தினேஸ்குமார் | N 0424080 |
| 11. வெற்றிமயில் பாலமுருகன் | N 0123609 |
| 12. சண்முகசுந்தரம் பாலகுமார் | N 1588169 |
| 13. மகேந்திரராஜா சஜந்தன் | M 1983382 |
| 14. லோகநாதன் முகுந்தன் | N 1447170 |
| 15. தாமோதரம்பிள்ளை உதயகுமாரன் | M 1322759 |
| 16. ராசதுரை சயந்தன் | N 0115512 |
| 17. தருமலிங்கம் பாலசுந்தன் | N 1211832 |
| 18. சின்னத்தம்பி சிவபாலன் | N 2323960 |
| 19. நாகரட்ணம் பார்த்தீபன் | N 1709779 |
| 20. வரகாந்தன் உலகநந்தன் | N 1785726 |
| 21. பூதன் சந்திரகுமார் | N 1557964 |
| 22. குமாரவேலு சிவகுமாரன் | N 1166333 |

இவர்களுடைய வீசா, புத்தகத்தில் அடிபட்டும் இவர்கள் போகவில்லை. ஆனால், இப்போது அதன் காலம் முடிந்து விட்டது. மேலும் நீங்கள் போக விரும்பினால் வீசாவைப் புதுப்பித்து மீண்டும் போக முடியும். அவ்வாறு போக விருப்பமானவர்கள் எங்களின் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| 01. பரஞ்சோதி றேகன் | N 1543661 |
| 02. முருகாநந்தன் கலாஜினி | N 1728442 |
| 03. ரட்ணசிங்கம் கிங்ஸ்லி செல்வகுமார் | N 1543664 |
| 04. பாலசுப்பிரமணியம் அச்சுதன் | N 1554236 |
| 05. ரட்ணசிங்கம் தவசீலன் | N 1557373 |
| 06. செல்லக்கண்டு சிறிவஜன் | N 1551236 |
| 07. நடேசன் கமலதாஸ் | N 0424081 |

**AFRAS ENTERPRISES**
476-D5-D6-D7, First Floor Maradana Shopping Centre,
Maradana, Colombo - 10, Sri Lanka.
Tel: 094114714288, 0602168529
e.mail : afras@sltnet.lk / ruwaiz@sltnet.lk, web: www.afraslk.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

## கொடூரங்களைத் தடுக்கும் விடயத்தில் மனமுண்டானால் மட்டுமே இடமுண்டு

தலைநகர் கொழும்பிலும்,ஏனைய இடங்களிலும் ஆட்கடத்தல் மற்றும் அச்சுறுத்திக் கப்பம் அறவிடல் என்பன வகை தொகையின்றி எல்லை மீறி நடந்துவரும் விவகாரங்கள். அவை சர்வதேச மட்டத்தில் சிரத்தையையும் கவனத்தையும் ஈர்த்திருப்பதை அடுத்து 'எங்கப்பன் குதிருக்குள் இருந்து மெல்ல மெல்ல வெளிப்படும் நிலை' உருவாகியிருக்கின்றது.

இக்கடத்தல்கள், படுகொலைகளுடன் பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படையினருக்குத் தொடர்புகள் இருப்பதை சாடை மாடையாக ஒப்புக்கொள்ளும் நிலைக்காவது இறங்கி வரவேண்டிய அளவுக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார் பொலிஸ் மா அதிபர்.

பமுனுகம, முத்துராஜவெலவிலும், அநுராதபுரம் திறப்பணைப் பகுதியிலும் அடுத்தடுத்து ஐந்து, ஐந்து சடலங்கள் அழுகி சேதமுற்ற நிலையில் கண்டுபிடிக்கப்பட்டமையைத் தொடர்ந்து எழுந்துள்ள குழப்பத்தைச் சமாளிக்கும் விதத்திலும்-

இலங்கைப் படைகளின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச மட்டத்தில் எழுந்துள்ள கொந்தளிப்பை எதிர்கொள்ளும் வகையிலும் -

இத்தகைய சாக்குப் போக்குகளை முன்வைக்க முயல்கிறார் பொலிஸ் மா அதிபர்.

ஏதோ, பொலிஸிலும், பாதுகாப்புப் படைகளிலும் உள்ள சில தீய சக்திகளே இத்தகைய மனித உரிமை மீறல்கள் மற்றும் ஆட்கடத்தல்,, கப்பம் வசூலித்தல், படுகொலைகள் போன்றவற்றில் ஈடுபடுகின்றன என்ற மாதிரியும், இத்தகைய 'அரச பயங்கரவாதத்துக்கும்' பாதுகாப்புப்படைகள் மற்றும் பொலிஸின் தலைமைக்கும், அரச வழிகாட்டல்களுக்கும் தொடர்புகள் ஏதும் இல்லை என்பது போலவும், மேலிடத்து ஆசி, அங்கீகாரமின்றி அங்கொன்றும் இங்கொன்றுமாக இடம்பெறும் சம்பவங்களே இவை என்ற தோற்றப்பாட்டை உருவாக்கும் வகையிலும் விளக்கம் கூற - படம் போட - முயல்கிறார் அவர்.

கொழும்பில் அவ்வப்போது இடம்பெறும் இத்தகைய ஆட் கடத்தல்கள், மிரட்டிக் கப்பம் வசூலித்தல், படுகொலைகள் என்பவை பற்றிய செய்திகள் ஊடகங்களில் பரபரப்பாக வெளிவருகின்றன. கொழும்பில் இயங்கும் மக்கள் கண்காணிப்புக்குழு மற்றும் இவ்விடயத்தில் அதிக ஈடுபாடு காட்டும் பிரதி அமைச்சர் இராதாகிருஷ்ணன் போன்ற தரப்புகளிடமிருந்து உடனுக்குடன் சூடாக வெளிவரும் அறிக்கைகள், அறிவிப்புகள் உண்மை நிலையை அம்பலப்படுத்தி வருகின்றன.

ஆனால் இவ்விவகாரங்களில் மேலும் மோசமான நிலைமை, தலைநகர் கொழும்புக்கு வெளியே - அரச கட்டுப்பாட்டில் உள்ள தமிழர் தாயகப் பிரதேசங்களில் - குறிப்பாக யாழ். குடாநாடு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற பகுதிகளில் - நிலவி வருகின்றது. அந்த அராஜகங்கள் குறித்து சிரத்தை கொள்வார் எவருமில்லை. அப்பிரதேசங்களில் தமிழர் படும் பேரவலம் பற்றிச் சிந்திப்பார் எவருமில்லை.

தலைநகரிலும் அதை ஒட்டிய பிற இடங்களிலும் இத்தகைய அராஜகங்கள் வகை தொகையின்றி எல்லை மீறியமை பற்றிய விடயம் அம்பலமாகிய பின்னர்தான் இப்போது மூச்சு விடுகிறார் பொலிஸ் மா அதிபர்.

வெளியே இருக்கும் புலிகளைப் பிடிப்பதிலும் அவர்களை அழிப்பதிலும் காட்டும் சிரத்தையில் நூறில் ஒரு பங்கையாவது இத்தகைய 'பயிரை மேயும் வேலிகளை' மடக்குவதற்குப் பொலிஸ் மா அதிபர் காட்டுவாராயின் இந்தச் சிக்கலுக்கு முடிவு கட்டி விடலாம் என்பதும் திண்ணம்.

புலிகள் நடத்தியது என்று கூறப்படும் தற்கொலைத் தாக்குதல் ஒன்றின் பின்னர் சம்பவம் நடைபெற்ற இடத்தில் பெருமளவு எரிந்து சேதமுற்ற நிலையில் கிடைத்த கையடக்கத் தொலைபேசி 'சிம்' அட்டையின் அரைவாசித்துண்டை வைத்துக்கொண்டு அந்தத் தற்கொலைத் தாக்குதலின் மர்மங்கள் பற்றிய முழு முடிச்சையும் புலனாய்வுத்துறை அவிழ்த்து விட்டதாகப் புகழாரம் சூட்டப்படுகின்றது. நல்லது.

இந்த ஆட்கடத்தல்கள், கப்பம் வசூலித்தல் போன்றவற்றில் தாராளமாகப் பயன்படுத்தப்படும் தொலைபேசிகளின் முழு இலக்க விவரங்களையும் முழுத் தகவல்களையும் பாதிக்கப்பட்டோர் புலனாய்வுப் பிரிவினருக்கு விவரமாக வழங்கியும், சூத்திரதாரிகளை மடக்குவதில் அதற்கு அப்பால் விடயங்கள் நகர்வது இல்லையே! அது ஏன்?

ஊடகவியலாளர் சிவராம் விவகாரத்தில், அவர் கொலையுண்ட சமயம் தம்முடன் வைத்திருந்த கையடக்கத் தொலைபேசியின் 'சிம்' அட்டையை, சூத்திரதாரிகள் வசமிருந்து முழுதாகப் புலனாய்வாளர்கள் மீட்டனர் என்று கூறப்படுகின்றது. அதற்கு அப்பால் புலன் விசாரணை அதிகம் நகரவில்லையே! அது எப்படி? இவ்விவகாரம் நீதிமன்ற விசாரணையில் இருப்பதால் இதற்கு அப்பால் சிவராம் படுகொலைப் புலனாய்வு விடயத்தை இங்கு விமர்சிக்காமல் விடுவது நல்லது.

எது, எப்படியென்றாலும் இத்தகைய புலன் விசாரணைகளில் சூத்திரதாரிகள் மடக்கப்பட்டு, சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, தண்டிக்கப்பட வேண்டுமானால் -

இத்தகைய மனித உரிமைகளை மீறும் கொடூரங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டுமானால் -

முதலில் அத்தகைய கடும் நடவடிக்கைகளை உறுதியாக முன்னெடுப்பதற்கான இதய சுத்தியுடன் கூடிய திட சங்கற்பம் அரசுத் தலைமைக்கும், பாதுகாப்புத் தலைமைக்கும் இருக்க வேண்டும். 'மனமுண்டானால்தான் இடமுண்டு' என்பதே உண்மை.

அந்த மனம் - அதாவது இத்தகைய அராஜகங்களை அடக்கி, ஒடுக்கும் திடசங்கற்பம் - சம்பந்தப்பட்டோருக்கு உண்மையில் உண்டா என்பதே இங்கு கேள்வி.

பொலிஸ் மா அதிபரிடம் நாம் எழுப்பும் வினாவும் இதுதான்.

தலைநகரில் மாத்திரம் அல்ல, பிற தமிழர் தாயகப் பிரதேசங்களிலும் இப்போது இத்தகைய கொடூரங்களுக்கும் மனித உரிமை மீறல்களுக்கும் முடிவு கட்ட வேண்டுமானால், அதற்கான மன மாற்றம் - பற்று றுதி - திடசங்கற்பம் - முதலில் மேலிடத்தில் ஏற்பட வேண்டும்.

# பொலிஸ்மா அதிபரின் கருத்து திரிபுபடுத்தப்பட்டு விட்டதாம்!

## அமைச்சர் ரம்புக்வெல சமாளிக்க முயற்சி

கொழும்பு, மார்ச் 8

பொலிஸ்மா அதிபரின் கருத்து சில ஊடகங்களில் திரிபுபடுத்தி வெளியிடப்பட்டுள்ளது என்று பாதுகாப்புத் தொடர்பான பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல நேற்று தெரிவித்ததையடுத்து செய்தியாளர் மாநாட்டில் பெரும் சலசலப்பு ஏற்பட்டது.

தேசிய பாதுகாப்புத் தொடர்பான செய்தியாளர் மாநாடு நேற்றுக்காலை தேசிய பாதுகாப்பு தகவல் நிலையத்தில் நடைபெற்றது. அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல இங்கு கூறியதாவது:-

பொலிஸ் மா அதிபர் நேற்று (6ஆம் திகதி) நடத்திய செய்தியாளர் மாநாட்டில் பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 362 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் இராணுவ சிப்பாய்கள் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள்களும் அடங்குவர் என்று தெரிவித்துள்ளார். அத்துடன், ஆள் கடத்தல், கப்பம் பெறுதல் போன்ற குற்றச்சாட்டுகளும் தெரிவிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். ஆனால், சில ஊடகங்கள் கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் பொலிஸ் மற்றும் முப்படைகளைச் சேர்ந்தவர் கள் எனவும் இவர்கள் ஆள் கடத்தல் மற்றும் கப்பம் கோரல் ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் செய்தி வெளியிட்டுள்ளன. இது தவறு. - என்றார்.

ஊடகங்கள் சரியாகவே செய்தியை வெளியிட்டுள்ளன. இரகசிய பொலிஸ் அதிகாரி தெரிவித்தவற்றையே ஊடகங்கள் வெளியிட்டுள்ளன. அந்த செய்தி தவறென்றால் அதற்கு பொலிஸ் தரப்பே பொறுப்பேற்க வேண்டும். அந்தச் செய்தியாளர் மாநாட்டின் ஒலிப்பதிவு நாடாக்கள் என்னிடம் இருக்கின்றன என பி.பி.சி. செய்தியாளர் எல்மோ பெர்ணாண்டோ அமைச்சரிடம் அடித்துக் கூறினார்.

அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல,

அதுசரி, இருந்தும் மொத்தம் 452 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 372 பேர் தமிழர்கள், 61 பேர் சிங்களவர்கள், 14 பேர் முஸ்லிம்கள். இதில் ஐந்து பொலிஸ் கான்ஸ்டபிள்கள், 15 இராணுவச் சிப்பாய்கள், இராணுவத்திலிருந்து பாய்ந்து சென்றவர்கள் மூவரும் அடங்குவர். பாதாள உலகைச் சேர்ந்தவர்களும் இதில் அடங்குவர். இப்படியிருக்க ஆள் கடத்தல், கப்பம் பெறுதல் என்பவற்றில் பாதுகாப்பு படையினர் மாத்திரம் ஈடுபட்டனர் என்பது போல் சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருப்பதையே நான் தவறெனக் கூறுகிறேன். இவர்கள் அனைவரும் பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழேயே கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படவில்லை என்றும் அமைச்சர் ரம்புக்வெல சொன்னார். (ஐ)

### கல்வி நிர்வாக சேவைக்கு ஐவர் தெரிவு

அச்சுவேலி,மார்ச்8

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் பொதுத்துறையின் தரம் III பதவிக்கு 240 பேர் நாடளாவிய ரீதியில் நியமிக்கப்படவுள்ளனர்.

மொத்தம் 14 தமிழர்கள் இப்பதிவிக்கு தெரிவாகியுள்ளனர்.

நியமனம் பெறவுள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஐவரின் விவரம் வருமாறு:-

பி.முத்துராசா (நல்லூர், யாழ்ப்பாணம்), பி.இரவிச்சந்திரகுமார் (வட்டுக்கோட்டை), எஸ்.இராசேந்திரன் (சாவகச்சேரி), கே.பி. ஜெனற் (சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்), வி.புவனராசா (பளை).

தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான நியமனக்கடிதங்கள் எதிர்வரும் திங்கட்கிழமை மருதானை ஆனந்தா கல்லூரியில் வைத்து கல்வி அமைச்சால் வழங்கப்படவுள்ளன. (அ-11-88-202)

### மகளிர் இல்லத்தின் வெள்ளிவிழா

யாழ்ப்பாணம்,மார்ச்8

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் வெள்ளி விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு இல்லத்தின் அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (1-202)

### வடமராட்சியில் 2பேரை காணவில்லையென முறைப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 8

பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்களைக் காணவில்லையென அவர்களது உறவினர்கள் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்துள்ளனர்.

வியாபாரிமூலை, பருத்தித்துறையைச் சேர்ந்த தளையசிங்கம் சுதர்சன் (வயது 24) என்பவரை கடந்த 4ஆம் திகதி முதல் காணவில்லையென அவரது மனைவி முறைப்பாடு செய்துள்ளார். அதே வேளை-புலோலியைச் சேர்ந்த தவரட்ணம் சிவதர்சன் (வயது-11) என்பவரையும் காணவில்லையென அவரது உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். (அ-8)

**நாளை**

மாசி - 25
வெள்ளிக்கிழமை
09.03.2007
திதி: பஞ்சமி
பிற்பகல் : 02.44
நட்சத்திரம்: விசாகம்
முழுவதும்
சுபநேரம் : 03.23 - 04.53
ராகுகாலம் : 09.29 - 10.59

# கோதுமை மாவின் விலை இனி கிலோ 47 ரூபாவாக இருக்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 8

குடாநாட்டுக்குக் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ள கோதுமை மாவின் விலை மூன்று ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது 'ஜெனிகிளிப்பர்' கப்பலில் வந்து சேர்ந்துள்ள கோதுமை மா புதிய விலைக்கே கொள்வனவு செய்யப்பட்டதாக செயலக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

'பிறிமா' நிறுவனம் கோதுமை மாவின் விலையை முன்னரே அதிகரித்து விட்டதாகவும், ஆயினும் யாழ்ப்பாணத்துக்கு இதுவரையும் எடுத்துவரப்பட்ட கோதுமை மாவுக்கு அந்த விலை அதிகரிப்பு சேர்க்கப்படவில்லை எனவும், தற்போது எடுத்துவரப்பட்டுள்ள மாவுக்கு விலை அதிகரிப்பைச் சேர்ந்துக் கொள்ள முடிவாகி உள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

அதன்பிரகாரம் இனிமேல் ஒரு கிலோ கோதுமை மா 47ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும். (அ-8)

# வடமராட்சி வடக்குக் கடலில் மீன்பிடிக்க இன்னும் அனுமதியில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 8

வடமராட்சி வடக்குக் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை என்று மீனவர் சமாச வட்டாரங்கள் நேற்று உதயனுக்குத் தெரிவித்தன.

குடாக்கடலில் மீன்பிடிப்பதற்குக் கடந்த சில தினங்களுக்கு முன்னர் அனுமதி வழங்கப்பட்ட போதிலும் வடமராட்சி வடக்குக் கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு மீனவர்கள் அனுமதிக்கப்படவில்லை என அப்பகுதி கடற்றொழிலாளர் சங்கங்கள் தமக்கு அறிவித்துள்ளதாக மீனவர் சமாச வட்டாரங்கள் தெரிவித்தன.

குருநகர் கடற்பகுதியில் தற்போது சுமார் ஒன்றரைக் கிலோமீற்றர் தூரம் வரை மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், தீவகக்கடற்பரப்பிலும் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சிக் கடலில் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்குவது தொடர்பாக தாம் சம்பந்தப்பட்ட தரப்புடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும், இது தொடர்பாக விரைவில் ஒரு சாதகமான பதில் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் மீனவர் சமாச வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (அ-8)

## அமெரிக்காவும் இலங்கையும்

# உயிர் ஆபத்தற்ற இராணுவ தளபாடங்களை பரிமாறிக்கொள்ள ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்பு, மார்ச் 8

உயிர் ஆபத்து விளைவிக்காத இராணுவத் தளபாடங்களைப் பரிமாறிக் கொள்வதற்கான ஒப்பந்தம் ஒன்றில் இலங்கையும் அமெரிக்காவும் கைச்சாத்திட்டுள்ளன.

இலங்கை அரசு சார்பில் பாதுகாப்புத்துறை செயலர் கோத்தபாய ராஜபக்ஷவும் அமெரிக்க அரசின்சார்பில் அந்நாட்டு தூதுவர் றொபேர்ட் பிளேக்கும் அதில் கைச்சாத்திட்டனர்.

இந்த ஒப்பந்தத்தின் கீழ். அமைதிகாக்கும் செயற்பாடுகளின் போது மனித நேய நடவடிக்கைகளின்போதும் அல்லது இவ்வாறான கூட்டு பயிற்சிகளின் போதும் அமெரிக்காவும் இலங்கையும் இராணுவத் தளபாடங்களை இடமாற்றம் செய்தல், பரிமாறிக்கொள்ளல், ஆதரித்துக்கொள்தல் மற்றும் எரிபொருள் மீள் நிரப்பிக் கொள்தல் போன்ற சேவைகளை மேற்கொள்ள முடியும்.

இதில் அனுமதிக்கப்படும் பொருள்கள் மற்றும் சேவைகளில் உணவுகள், பெற்ரோலியப் பொருள்கள் மற்றும் இவைகளை இடம்மாற்றிக்கொள்வதும் அடங்கும்.

ஆயுதங்கள் அல்லது வெடிபொருள்கள் இதில் தடைசெய்யப்பட்டுள்ளன. அனர்த்த நிவாரணம் அல்லது அமைதிகாக்கும் செயற்பாடுகள் போன்ற அவசர வேளைகளில் ஒரு நாட்டின் படைகள் மற்றநாட்டின் படைகளுக்கு உதவமுடியும்.

இவ்வொப்பந்தம் 10 ஆண்டுகளுக்கு செயற்படுவதாய் இருக்கும் எந்தவொரு செயற்பாடும் அடுத்த தரப்பின் சம்மதத்தைப் பெற்றுக்கொண்ட பிறகே செயற்படுத்தப்படும். (அ-ப)

### வலி.மேற்கில் நேற்று சுற்றிவளைப்புத் தேடுதல்

சங்கானை, மார்ச் 8

சங்கானை, தொட்டிலடி, சண்டிலிப்பாய் உள்ளிட்ட வலி.மேற்குப் பிரதேசத்தில் நேற்றுக்காலை 5 மணி முதல் முற்பகல் 11 மணி வரை சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தப்பட்டது.

அந்தவேளையில் இளவயதினர் சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

இச் சுற்றிவளைப்பினால் பாடசாலைக்கு மாணவர் வரவு மிகக் குறைந்திருந்தது. காலை வேளையில் அப்பிரதேசங்கள் [illegible] (அ-202-29)

குடாநாட்டின் ட்டிச் செய்திகள் யாழ்ப்பாணம்

### கப்பல் பதிவுகள் தற்போதைக்கு நிறுத்தம்

யாழ்ப்பாணம்,மார்ச்8

பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அவசர தேவைகள் நிமித்தம் வெளிமாவட்டங்களுக்குச் செல்வோருக்கான யாழ். செயலகத்தால் மேற்கொள்ளப்படும் கப்பல் பயணப் பதிவுகள் தற்போதைக்கு நிறுத்தப்பட்டுள்ளன.

இம்மாதம் 31ஆம் திகதி வரை கப்பலுக்கான பயணப் பதிவுகள் ஏற்கனவே மேற்கொள் ளப்பட்டுவிட்டதால், புதிதாகப் பயணப் பதிவுகளை மேற்கொள்ள விரும்பும் பல்கலைக்கழக மாணவர்களும், அவசர தேவை நிமித்தம் செல்வோரும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதிக்குப் பின்னரான பயணங்களுக்கே பதிவுகள் இனி அறிவிக்கப்படும் வேளையில் மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-8-79)

### மண்ணெண்ணை விநியோகம்

யாழ்ப்பாணம்,மார்ச்8

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முற்றவெளியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் யாழ். பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/68, ஜே/69, ஜே/71, ஜே/72, ஜே/73, ஜே/81, ஜே/83 ஆகிய பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு மார்ச் மாதத்துக்குரிய மண்ணெண்ணை விநியோகம் இடம்பெற்றுவருகின்றது. (202-17)

### கிராமசேவையாளர் போட்டிப்பரீட்சை

நல்லூர்,மார்ச்8

கிராம உத்தியோகத்தர்களைத் தெரிவுசெய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குரிய வினாத்தாள்கள் அநேகமாக இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிமனைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நெடுந்தீவு உட்பட யாழ். நகரில் உள்ள 24 பரீட்சை நிலையங்களுக்கும் வினாத்தாள்கள் உடனடியாக அனுப்பிவைக்கப்படும் என்று யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் தெரிவித்தார்.

அரசாங்க உத்தியோகத்தரைத் தெரிவுசெய்வதற்கான போட்டிப் பரீட்சை ஒன்று நெடுந்தீவில் நடைபெறுவது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-1-111)

### மகளிர் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,மார்ச்8

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ். பால் நிலை அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான செயற்குழுவும் செயற்திறன் அரங்க இயக்கமும் இணைந்து நடத்தும் மகளிர்தின ஒன்றுகூடல் நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 9 மணி முதல் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'உள்நின்று ஒளிரும் சக்தி' என்னும் தலைப்பில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கலை நிகழ்வுகள் இடம்பெறும்.

பிற்பகல் 1.15 மணிதொடக்கம் 2.45 மணிவரை பெண்களின் கைவினைக் கண்காட்சி இடம்பெறும். (202)

### வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,மார்ச்8

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளைத் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் எழுதிய 'வெல்வெயார் காம்ஸ் இன் எமர்ஜென்சி' (Welfare Camps in Energency) என்னும் நூலின் வெளியீடு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியமும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரின் யாழ். கிளையினரும் இணைந்து நடத்தும் இந்த வெளியீட்டு விழாவிற்கு ஒன்றியத்தின் தலைவர் ஏ.கே.சிவசுப்பிரமணியம் தலைமை தாங்குவார். (1-202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூட்டுக் காயங்களுடன் பெண்ணின் சடலம் மீட்பு

திருகோணமலை, மார்ச் 8

திருகோணமலை, குச்சவெளியில் பெரிய புலம் பகுதியில் நேற்றுக்காலை 10.30 மணியளவில் சூட்டுக்காயங்களுடன் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டது.

நிலாவெளி வேலூரைச் சேர்ந்த உமாசங்கர்-சசிகலா (வயது-30) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவர் என்று அடையாளம் காணப்பட்டது.

பிரஸ்தாப பெண் நிலாவெளிப் பகுதியில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக இடம்பெயர்ந்து குச்சவெளி பெரியபுலம் பிரதேசத்தில் தற்காலிக வீடு ஒன்றில் வசித்து வந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-4)

## வவுனியாவில் இளைஞர் சுட்டுக்கொலை

வவுனியா, மார்ச் 8

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் இளைஞர் ஒருவர் நேற்றுக்காலை சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதேஇடத்தைச் சேர்ந்த சிவபாலன்-சசிகரன் (வயது-27) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவர் என அடையாளம் காணப்பட்டது. சடலம் மரண விசாரணையின் பின்னர் வவுனியா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (அ-4)

## முல்லையில் நேற்று கண்டனப் பேரணிகள்

முல்லைத்தீவு, மார்ச் 8

தமிழ்க் கல்விச் சமூகத்தினர் தொடர்ந்தும் படுகொலை செய்யப்பட்டு வருவதைக் கண்டித்து ஒட்டுசுட்டான், மல்லாவி ஆகிய இடங்களில் நேற்று கண்டனப் பேரணிகளும் கண்டனக் கூட்டங்களும் நடைபெற்றன. கண்டனப் பேரணியில் ஒட்டுசுட்டான், மல்லாவி பிரதேசங்களின் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்துகொண்டனர். கண்டனக் கூட்டம் நடைபெற்ற பின்னர் அரச அதிகாரிகளிடம் மகஜர்கள் சமர்ப்பிக்கப்பட்டன. (அ-4)

## வவுனியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தான நோக்கிச் சென்றுகொண்டிருந்த பொலிஸ் வாகனத்தை இலக்குவைத்தே இந்தத் தாக்குதல் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டது என்றும் -

வாகனத்தைச் செலுத்திச்சென்ற பொலிஸ் உத்தியோகத்தரே உயிரிழந்தார் எனவும் -

காயமடைந்தவர்கள் அனுராதபுரம் மற்றும் வவுனியா வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் -

ஊடகமத்திய நிலையம் தகவல் தெரிவித்தது.

## புலிகளைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பில் புலிகளின் பிடியில் இருந்து மீட்டெடுக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் மட்டக்களப்பு சென்ற அமைச்சர் மஹிந்த சமரசிங்க, வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் ஐ.நா.பிரதிநிதிகள் மீது புலிகள் மோட்டார் மற்றும் ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

தமிழர்களின் விடுதலைக்காக போராடுகின்றோம் எனக்கூறும் பிரபாகரன் தமிழ் மக்களையே அழிக்கின்றார். அவரின் பிடியில் இருந்து தமிழ் மக்கள் முற்றுமுழுதாக மீட்கப்படுவர். கடந்த ஒரு மாத காலப்பகுதியில் புலிகள் மேற்கொண்ட பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக 15 முப்படையினரும் பொலிஸாரும், 42 பொதுமக்களும் உயிரிழந்துள்ளனர். 83 முப்படையினரும் பொலிஸாரும், 29 பொதுமக்களும் காயமடைந்துள்ளனர். ஆகவே, இந்த நாட்டை அபிவிருத்திசெய்யும் அதேவேளை பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்துச் செல்லும் -என்றார் (ஐ-7)

## நளினியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் சேர்ந்து தங்கியிருக்கவும் இங்கேயே அவள் தங்கி படிக்கவும் அனுமதி வேண்டும். இந்தியாவில் தான் அவள் பிறந்தாள் என்று மனுவில் அவர் கூறியிருந்தார். இந்த வழக்கு நேற்றுமீண்டும் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள் நளினி மகளுக்கு இந்தியா வர அனுமதி வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

## தஞ்சம் கோரியோரைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீறல்களில் ஈடுபட்டுள்ளதாக சர்வதேச சட்ட நிபுணர்கள் சபை அறிவித்துள்ளது.

இந்த நிலையில் மேற்படி மனிதவுரிமை மீறல்களில் இருந்து தப்பிக் கொள்வதற்காகபல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் இலங்கையிலிருந்து தப்பி இந்தியாவிற்கும், ஏனைய நாடுகளுக்கும் சென்று கொண்டிருக்கின்றனர். அதன் ஒரு பகுதியாக இலங்கையில் இருந்து தப்பிச் சென்ற 83 தமிழர்கள் 22. 02. 2007 அன்று அவுஸ்திரேலியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை மீண்டும் இலங்கைக்கு அழைத்துவர ஸ்ரீலங்கா அரசு முயன்று வருகின்றது. இலங்கை அரசின் கோரிக்கைக்கு அமைவாக தமிழ் அகதிகள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டால் அவர்கள் அரச படைகளாலும், துணை இராணுவக் குழுவினராலும் கைது, சித்திரவதை, கடத்தல் அல்லது கொலை செய்யப்படக்கூடும் என அஞ்சுகின்றோம். கடந்த 2002 ஆம் ஆண்டு உயிராபத்திற்கு அஞ்சி நாட்டை விட்டு வெளியேறி 2002 மே மாதம் பிரான்ஸ் நாட்டினுள் நுழைந்து அகதி அந்தஸ்து கோரிய இராசேந்திரம் இளஞ்செல்வன் (இல, 83, கண்டி வீதி, நுணாவில்லேன், சாவகச்சேரி, யாழ்ப்பாணம்) என்ற இலங்கை அகதியின் கோரிக்கை பிரான்ஸ் அரசினால் நிராகரிக்கப்பட்டு 31. 08. 2005 ஆம் திகதி இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டார். கடந்த 28. 02. 2007 அன்று இளஞ்செல்வனைத் தேடி அவரது வீட்டிற்குச் சென்ற இலங்கை இராணுவத்தினரும் ஈ. பி. டி. பி. என்றழைக்கப்படும் துணை இராணுவக்குழுவினரும் காலை 5.50 மணியளவில் அவனுவீட்டில் வைத்து சுட்டுக்கொன்றுள்ளனர்.

இவ்வாறான சூழ்நிலையில் ஆஸ்திரேலிய கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 83 இலங்கைத் தமிழர்களையும் இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படும் வரை திருப்பி அனுப்ப வேண்டாமென மக்கள் பிரதிநிதிகளாகிய நாம் ஆஸ்திரேலிய மற்றும் இந்தோனேஷிய அரசாங்கங்களைக் கேட்டுக்கொள்கிறோம். - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகள் மீதும், அரசு மீதும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்களுக்கு எதிரான சில தாக்குதல்கள் உட்பட ஆயுதம் தாங்கிய பல தாக்குதல்களில் அரச படைகளுடன் தொடர்புடைய துணைக் குழுக்கள் ஈடுபட்டமை தொடர்பாக பல எண்ணிக்கையில் அறிக்கைகள் கிடைத்துள்ளன.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவைக் கொல்வதற்கு டிசம்பரில் புலிகள் இயக்கம் மேற்கொண்ட முயற்சியை அடுத்து -

'வாரண்ட்' உத்தரவின்றியே எவரையும் கைது செய்தல், பொறுப்புக்கூறத் தேவையற்ற வகையில் பொதுமக்கள் எவரையும் பன்னிரண்டு மாதங்கள் வரை தடுத்து வைத்தல் என்பன உட்பட பாதுகாப்புப் படையினரின் அதிகாரங்களை விசாலப்படுத்தும் வகையில் அவசரகால ஒழுங்கு விதிகளை அரசு கடுமையாக்கியது.

### புலிகள் குறித்து

வடக்கு - கிழக்கின் பெரும் பகுதியைத் தொடர்ந்து தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம், அரசியல் நோக்கம் கொண்ட படுகொலைகள், தற்கொலைத் தாக்குதல்கள், காணாமற்போகச் செய்தல், சித்திரவதை, எழுந்தமானமான கைதுகள், தடுத்து வைப்புகள், நீதியான பொது விசாரணைகளுக்கான வாய்ப்பை மறுத்தல், ஆட்களின் தனிப்பட்ட வாழ்வில் கண்டபடி தலையிடுதல் மற்றும் பேச்சுச் சுதந்திரம், ஊடக சுதந்திரம் ஒன்றுகூடுவதற்கும் இணைந்து செயலாற்றுவதற்குமான சுதந்திரம் ஆகியவற்றை மறுத்தல் மற்றும் சிறுவர்களைப் படைக்குத் திரட்டுதல் ஆகியவற்றில் ஈடுபட்டு வருகின்றது.

### காணாமற்போதல்

அரசுடன் அல்லது புலிகளுடன் தொடர்புபட்ட துணைக் குழுக்களால் அல்லது ஆயுதப் படைகளால் அரசியல் நோக்கதோடு ஆட்கள் காணாமாற்போகச் செய்யப்பட்ட 345 சம்பவங்கள் குறித்து நாடு முழுவதிலிருந்தும் முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டிருக்கின்றன என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்திருக்கின்றது.

### சித்திரவதைகள்

சித்திரவதை செய்தல் தண்டனைக்குரிய குற்றமாக சட்டத்தில் கூறப்பட்டாலும், சித்திரவதைக்கு எதிரான ஐ.நா. சாசனத்தின் பல ஏற்பாடுகள் நடைமுறைப் படுத்தப்படவேயில்லை.

குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் சித்திரவதை தடுக்கப்பட்டதாக இருந்தாலும் ஏனைய நிலைமைகளில் அது அனுமதிக்கப்பட்டதாகவே உள்ளதாக மனித உரிமைக்குழுக்கள் வாதிக்கின்றன.

மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் நம்பத் தகுந்த வட்டாரங்களின்படி -

ஒப்புக்கொள்ள வைக்கவும், வாக்கு மூலங்களைப் பெறவும் பொலிஸ் சித்திரவதைகளை மேற்கொள்வது ஒரு நோயாக எங்கும் பரவியுள்ளதோடு, அது தண்டனை விலக்களிப்பட்ட விடயம் என்ற அடிப்படையில் பிரயோகிக்கவும் படுகின்றது.

மேலும் சித்திரவதை உட்பட எத்தகைய சந்தர்ப்ப சூழ்நிலையின் கீழும் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்கள், அந்தத் தனி நபரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும் வரைத் தடுத்து வைப்பதற்குப் போதுமானவை என்ற வகையில் அவசரகால விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

### தன்னிச்சையான கைதுகள் தடுப்பு வைப்புகள்

நீதியற்ற கைதுகள் மற்றும் தடுத்து வைப்புகளை சட்டம் தடைசெய்துள்ள போதும், அத்தகைய சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

அவசரகால விதிகள் நடைமுறையில் இருக்கும் போது 528 கைதுகள் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு கைது செய்யப்பட்டோர் சில நாட்களுக்குள் விடுவிக்கப்பட்டு விட்டனர் என்று அரசு கூறுகின்றது.

டிசம்பர் முதலாம் திகதி பாதுகாப்புச் செயலாளரைக் கொல்லப் புலிகள் மேற்கொண்ட முயற்சிகளை அடுத்து, யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு முந்தியதான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் சில ஏற்பாடுகளை அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் அரசு கொண்டு மீண்டும் வந்தது.

இது, கைது மற்றும் தடுத்து வைத்ததன் விடயங்களில் முன்னர் அனுமதித்ததை விட கூடுதலான அதிகாரங்களைப் பாதுகாப்புப் படைகளுக்கு வழங்கியது.

### அதிகளவில் பலப் பிரயோகம்

பொதுமக்களை இலக்கு வைக்கும் தாக்குதல் உட்பட போரில் புலிகள் அதிகளவு பலத்தைப் பிரயோகிக்கின்றமை வழமையாக உள்ளது.

2001இல் அமைதி முயற்சிகள் ஆரம்பமானது முதல் இலக்கு வைத்துக் கொல்லுதல், ஆட்கடத்தல், கப்பல்களைக் கடத்தல், சிறுவர்கள் உட்பட ஆட்களைப் பலவந்தமாகப் படைக்குத் திரட்டுதல் போன்றவற்றில் புலிகள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

அரசுடனான மோதல் காரணமாகவும், ஆழிப்பேரலை காரணமாகவும் உள்நாட்டுக்குள் இடம்பெயர்த மக்களுக்கு என ஒதுக்கப்பட்ட உணவு, எரிபொருள் மற்றும் ஏனைய பொருள்களை புலிகள் அபகரித்து வருகின்றனர் என்று ஒழுங்காக அறிக்கைகள் வருகின்றன.

இந்த வருடத்தில் பொலிஸ் மற்றும் படைகளைச் சேர்ந்த 531 உறுப்பினர்களையும், ஈ.பி.டி.பி, கருணா குழுவுக்கு ஆதரவானோர், பாதுகாப்புப் படையினருக்குத் தகவல் கொடுக்கும் தமிழர்கள், பொதுமக்கள் என 34இற்கும் அதிகமானோரையும் புலிகள் கொலை செய்தனர் என நம்பகமான அறிக்கைகள் கிடைத்துள்ளன.

### சர்வதேச விசாரணைகள்

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரித்து, தமது அவதானிப்புகளை வெளியிடும் நடவடிக்கையில் பல்வேறு சர்வதேச மற்றும் உள்நாட்டு மனித உரிமை அமைப்புகள் அரசின் கட்டுப்பாடின்றி பொதுவாக ஈடுபட்டன. அரச அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்கியமையோடு தங்கள் கருத்துக்களையும் வெளிப்படுத்தினர்.

மனித உரிமைகள் அமைச்சர்களின் முன்னைய குற்றச்சாட்டுகளை அடுத்து அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் தொடர்பாக அரசு அதிக கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்தது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனப் பணியாளர்கள் பணி புரிவதற்கான பணி அனுமதியை ஒகஸ்ட் மாதத்துக்குப் பின்னர் அரசு நீடிக்கவில்லை.

### சிறுவர் படை

யுத்தமுனை உதவிப் பணிகளிலும் சிலசமயம் மோதல்களிலும் சிறுவர்களைத் துருப்புகளாகப் புலிகள் பயன்படுத்துகின்றனர். இதற்காக சிறுவர்களைப் படைக்கு அவர்கள் திரட்டுகின்றனர். சில சமயங்களில் பலவந்தமாகவும் இது நடைபெறுகின்றது.

பெப்ரவரியில் கருணா குழுவும் புலிகள் இயக்கமும் படைக்கு ஆள் திரட்டும் முயற்சியை - குறிப்பாகக் கிழக்கில் - தீவிரப்படுத்தின என நம்பத்தகுந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

புலிகளால் சிறுவர்கள் கட்டாயப்படுத்தி படைக்குத் திரட்டியமை தொடர்பாக 450இற்கும் அதிக சம்பவங்கள் குறித்து நம்பகமான வட்டாரங்களின் அறிக்கைகள் உள்ளன. கருணா குழுவால் இவ்வாறு பலவந்தமாக இருநூறு சிறுவர்கள் வரை படைக்குத் திரட்டப்பட்டுள்ளனர் என உத்தேசமாக மதிப்பிடப்படுகிறது.

மேலும் வருட முடிவில் இவ்வாறு ஆயிரம் சிறுவர்கள் இன்னும் விடுவிக்கப்படாமல் புலிகளின் படைகளில் உள்ளனர் என இவ்வட்டாரங்கள் மேலும் கூறுகின்றன.

-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

863 நீலம்

வெற்றி இலக்கங்கள்

மகரம் 09 26 30 46

06-03-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 4892122 - 4907782

ஜக்பொட் பரிசு ரூபா.1,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 344,449 | 10/- | 3,444,490/- |
| 2 இலக்கங்கள் | 31,608 | 20/- | 632,160/- |
| 1 இல. + லக்கினம் | 31,330 | 30/- | 939,900/- |
| 2 இல. + லக்கினம் | 2,873 | 100/- | 287,300/- |
| 3 இலக்கங்கள் | 828 | 500/- | 414,000/- |
| 3 இல. + லக்கினம் | 104 | 5,000/- | 520,000/- |
| 4 இலக்கங்கள் | 5 | 100,000/- | 500,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,000,000/- | - |
| மொத்தம் | | | 6,737,850/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 411,202 | | 7,761,350/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,769,350/-

தொடர் இல. 5776973 க்கு மேற்பட்ட சீலப்பு நிற டிக்கட்டுக்கள் 2007 மார்ச் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கொழும்பு | 4900625-2-56 |
| கம்பஹா | 4896467-3-00 |
| பதுளை | 4897462-9-34 |
| கண்டி | 4892764-5-85 |
| திருகோணமலை | 4893510-5-49 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03



BRIGHTMAN

பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.

A/L 2007 ACCOUNTS PAPER CLASS

BY: SASIRUBAN

ஆரம்பம்:- 09.03.07

Fri 6.30 am

(Mon, Fri - 6.30)


## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் கார்த்திகேசு



மல்லாகம், நீலியம்பனையை வசிப்பிடமாகக் கொண்ட வைத்திலிங்கம் கார்த்திகேசு நேற்று (07.03.2007) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வைத்திலிங்கம் - பாறுப்பிள்ளை தம்பதியரின் மகனும் கைலாயபிள்ளை, நாகம்மா ஆகியோரின் சகோதரரும் அருந்ததி, புஸ்பராணி, சிறீகரன், சிவநேசன் (தபாலதிபர், காங்கேசன் துறை),புஸ்பமலர், காலஞ்சென்ற செல்வராணி மற்றும் ஜெயராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் லோகேஸ்வரன், செல்வநாயகம் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(08.03.2007) வியாழக்கிழமை பி.ப. ஒருமணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீலியம்பனை,
மல்லாகம்.

தகவல்:
கா.சிவநேசன் (தபாலதிபர், காங்கேசன்துறை)

## தவறிவிட்டது

சுப்பிரமணியம் சுகிதா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.785123468V)யும் விசேட அடையாள அட்டையும் நேற்று (07.03.2007) ஆஸ்பத்திரி வீதிக்கும் இராசாவின்தோட்டத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல.16, இராசாவின்தோட்டம் லேன், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அல்லது 0777283600/0776016263/2222216 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.


## விற்பனைக்கு

- ★P3, P4 Computer
- ★புதிய Creative 2.1 Woober
- ★Combo TV Box
- ★Sony CD-R/RW
- ★Combo Drive

தொடர்பு: Kugan Copyist

214C இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.


## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் தவராசா பூபதி

உதிப்பு 01 - 09 - 1959 உதிர்வு 23- 01-2007

எமது அன்புத் தாயின் திடீர் மறைவு கேட்டு நேரில் ஆறுதல்தெரிவித்த வர்த்தகர்கள், சந்தை வியாபாரிகள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி நிலைய ஆசிரியர்கள், மாணவர்கள், வைத்திய சாலை ஊழியர்கள், யாழ். தொழில்நுட்ப கல்லூரி நண்பர்கள், உற்றார், உறவினர்கள், குடும்ப நண்பர்கள் மற்றும் தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்த உறவுகளுக்கும் கண்ணீர் அஞ்சலி துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்ட உறவுகளுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (08.03.2007) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தபால் நிலைய வீதி,
கற்குளி, சாவகச்சேரி.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.03.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.